வணிகவரித் துறை

மானியக் கோரிக்கை எண் 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள்
# ஏனைய வரிகள், தீர்வைகள்
# நிருவாகம்

1999 - 2000

©
தமிழ்நாடு அரசு
1999

மானியக் கோரிக்கை எண்-4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

## தோற்றுவாய்

தமிழகத்தில் 1998-99ஆம் ஆண்டில் வரி விதிப்பின் மூலம் சுமார் ரூ.6583.00 கோடி வருவாய் வணிக வரிகள் மூலமாக ஈட்டப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில், வரி விதிப்பின் மூலம் ஈட்டப்படும் வருவாய் ஆண்டுதோறும் கூடிக் கொண்டே வந்துள்ளது. தற்போது, அரசின் வருவாயில் 70 விழுக்காடு விற்பனைவரி மூலம் அரசுக்குக் கிடைக்கிறது.

2. முனைவர் திரு.ராஜா செல்லையா அவர்களது தலைமையிலான குழு, 1994ஆம் ஆண்டு அளித்த அறிக்கை பல்வேறு மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் கொண்ட ஒரு குழுவில் ஆய்ந்து விவாதிக்கப்பட்டது. அக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:-

(1) வரி கட்டமைப்பைச் சீரமைத்தல் மற்றும் எளிமைப்படுத்துதல்.

(2) மாநிலங்களுக்கிடையே இணக்கமான வரி வீதங்களை உருவாக்குதல்.

3. மதிப்புக் கூட்டுவரி முறையைப் படிப்படியாக அறிமுகப்படுத்துதல்.

3. மேற்சொன்ன வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு, தமிழகத்தில் வரி விதிப்புக் கட்டமைப்பில் பெரிய அளவில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. மாநிலம் முழுவதும் அனைத்து பொருட்களுக்கும் மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி அறவே நீக்கப்பட்டன. கூடுதல் விற்பனைவரி விதிப்பதற்கான விற்பனைத் தொகையைக் கணிசமாக உயர்த்தி, வரிக்கட்டமைப்பு சீரமைக்கப்பட்டது. அரசின் நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையைச் செம்மையாக செயல்படுத்தும் நோக்குடன் விற்பனைவரி அமைப்பு மற்றும் நடைமுறைகளில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆய்வு செய்ய திரு சி.தங்கராசு, இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்களைத் தலைவராகக் கொண்டு, 1996-ல் விற்பனைவரி சீர்திருத்தக் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரைகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பின்வருவன உட்பட பெரும்பாலான பரிந்துரைகள் மீது ஆணைகள்



வெளியிடப்பட்டுள்ளன:-

(1) பதிவுச் சான்றிதழ் புதுப்பித்துக் கொள்வதற்கான காலக்கெடு ஒவ்வொரு ஆண்டும், அந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து ஜூன் 30-ம் தேதிவரை என்று இருந்தது. அக்காலக்கெடு தற்பொழுது அந்தந்த ஆண்டின் "செப்டம்பர் 30-ம் தேதிவரை" நீட்டித்து, அதற்கொப்ப தமிழ்நாடு வணிகவரி விதி 24(9-A) திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(2) உற்பத்தியில் நுகரப்படும் அல்லது பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு மட்டுமல்லாது உற்பத்திக்காகத் தேவைப்படும் பொருட்களுக்கும் கொள்முதல் வரிவிதிக்கும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் பிரிவு 7-A திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(3) மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956-ன் பிரிவு 5(3)-ன் கீழ் வழங்கப்படும் வரி விலக்கு சம்பந்தமாக, வெளிநாட்டு வணிகரின் சரக்குக் கொள்முதல் ஆணையைத் தாக்கல் செய்யுமாறு வற்புறுத்தத் தேவையில்லை என அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

1. தமிழகத்தில் அனைத்து மட்டத்திலிருக்கும் மக்கள் நிலைமையைக் கருதி, குறிப்பாக ஏழை எளியவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலை, வரிவிதிப்பினால் உயராமலிருக்கும் வகையில் அரசு வரிவிதிப்புக் கொள்கையை வகுக்கின்றது. உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் பெருக்கும் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வரிவிதிப்பை அமைத்தால்தான் மக்கள் வாழ்க்கை முன்னேற்றமடைவதுடன், வருவாயும் பெருகும். இதனைக் கருத்தில் கொண்டு, அரசு தனது நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையை 1996-97ல் வெளியிட்டது. வகுக்கப்பட்ட நீண்டகால வரிவிதிப்புக் கொள்கைகளாவன:

(1) வரிவீதங்களில் அதிக அளவில் வெளிப்படைத் தன்மையையும் வரிவிதிப்பு மற்றும் வரிவசூலில் எளிமையையும் அளிக்கும் நோக்குடன் வரி வீதங்கள் மற்றும் வரி படிமுறைகளைச் சீரமைத்தல்.

வரி விதிப்பில் நவீன முறைகளையும், நடவடிக்கைகளையும் அதிக அளவில் அறிமுகப்படுத்துதல்.



(3) இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மேம்பாட்டைத் தூண்டுதல்; மற்றும் உள்ளூர் கொள்முதல் மற்றும் உள்ளூர் தயாரிப்பு ஆகியவைகளை ஊக்குவித்தல்.

(4) வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி மதிப்பு போன்ற வரி விதிப்பு நடைமுறைகள் என்ற வகையில், பெரும் எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

(5) அன்றாடம் பொது மக்கள் பயன்படுத்தும் வீட்டு உபயோகப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிச்சுமையினைக் குறைத்தல்.

5. அரசின் நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையின் அடிப்படையில், தொடர்ந்து அரசு வழங்கிய ஆண்டு வாரியான வரிச்சலுகைகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1996-1997 | - | ரூ.353 கோடி |
| 1997-1998 | - | ரூ.143 கோடி |
| 1998-1999 | - | ரூ. 81 கோடி |
| 1999-2000 | - | ரூ. 25 கோடி (சுமார்) |

6. 1999-2000-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன :-

அ. மக்கள் நலன் தொடர்பானவை

(1) (அ) மின்னணு படிப்பெருக்கி பொறிகள், படி பெருக்கிகள் உள்ளடங்கலான ரிப்போகிராபிக் நகல் பொறிகள், ஜெராக்ஸ் மற்றும் ஒளிப் படமெடுக்கும் பொறிகள் மற்றும் குறுகிய அளவிலோ, பெரிதுபடுத்திய அளவிலோ அல்லது மூலப்படிகளின் அதே அளவிலோ படிகளைப் பெறுதற்கான பிற மின்னணு சாதனங்கள்.

(ஆ) மின்னணு அட்டவணையிடும் பொறிகள், வருகை அட்டை துளையிடு பொறிகள், அஞ்சல் முத்திரையிடு பொறிகள், முகவரியிடும் பொறிகள், ஒரே சமயத்தில் பதிவாக்கும் கருவிகள் மற்றும் இதர மின்னணுப் பொருட்கள் உள்ளடங்கலாக (முதலாம் அட்டவணையில் வேறெங்கும் கூறப்படாத) பிற மின்னணு அமைப்பு முறைகள், கருவிகள், சாதனங்கள் மற்றும் இதர மின்னணு பொருள்கள்

(இ) அனைத்து வகை மின்னணு தொலை அச்சுப்பொறி மற்றும் தொலை நகல் பொறிகள்



(ஈ) மின்னணு தட்டச்சுப் பொறிகள்

(உ) ஒலித்தட்டை இயக்கச் செய்யும் கருவிகள் மற்றும் வானொலி இணைந்த கிராம போன்கள் உள்ளடங்கிய அனைத்துவகை கிராமபோன்கள், கிராம போன் ஒலித் தட்டுகள், ஒலித்தட்டு அடுக்கிகள் மற்றும் ஒலித்தட்டு மாற்றிகள்.

(ஊ) கம்பியில்லா வான்வழி ஒலி அலைகளைப் பெற்று ஒலிக்கச் செய்கின்ற கருவிகளுடனோ அல்லாமலோ, சொல்வதை பதிவு செய்து எழுதுவதற்காக திரும்ப ஒலிக்கின்ற கருவிகள், சீருந்து ஒலிப்பேழை ஒலிப்பு கருவிகள், ஒலிப்பேழை பதிவுக் கருவிகள், பேழை ஒலிப்புக் கருவிகள், அடக்க வட்ட தட்டு ஒலிப்புக் கருவிகள் (அவற்றில் ஏதேனும் ஒன்றுடன் சேர்ந்த அமைப்பு) உள்ளடங்கலாக ஒலியைப் பதிவு செய்கின்ற மற்றும் மீண்டும் ஒலிக்கச் செய்கின்ற சாதனங்கள் ( சி பகுதியில் 49-வது இனம் நீங்கலாக) மற்றும் அவற்றுடன் பயன்படுத்தப் படும் அடக்க வட்டத்தட்டு, காந்த சக்தி ஒலி நாடாக்கள், நுண்ணிய ஒலி நாடாக்கள், நுண்ணிய [illegible]

(எ) தொலைக்காட்சி படம் எடுக்கும் கருவிகள்,
தொலைக்காட்சிப் படம் காட்டும் கருவிகள்,
குறிப்பிட்ட எல்லைக்குள் ஒளிபரப்பைக்
காட்டுகிற தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும்
படம் எடுக்கும் கருவிகள், சிறந்த தொலைக்
காட்சிப் பெட்டி, வீடியோ தொலைக்காட்சிகள்,
வீடியோ படம் எடுக்கும் கருவிகள்,
தொலைக்காட்சித் தூண்அமைப்புகள்,
வீட்டில் வானலைக் கொடி
(டிஷ் ஆண்டனா) மற்றும் திறன் பெருக்கிகள்

(ஏ) மின்னணு அனலாக் டிஜிட்டல் நேரங்
காட்டுகின்ற அமைப்புடன் சேர்த்தோ
இல்லாமலோ உள்ள ஒளிப்பேழைப் படம்
காட்டும் மற்றும் படம் பதிவு செய்யும்
கருவிகள், காந்த அலையுடைய வெற்று ஒளி
நாடாக்கள், அவற்றுடன் சேர்த்து
பயன்படுத்துவதற்கான ஒளிப் பேழைகள்
மற்றும் ஒளிப் பேழை கணிப் பொறிகள்
(மின்னணு விளையாட்டுகள்)

ஆகிய பொருட்களுக்கு 11 விழுக்காட்டிலிருந்து 4
விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.



(2) செல்லுலார் தொலைபேசிகளுக்கு
விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து
2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(3) (அ) ரொக்கம் பதிவு செய்யும், அட்டவணைப்
படுத்தும், கணக்கிடும் பொறிகள்
உள்ளிட்ட நகலான மின்னணு பொறிகள்

(ஆ) டிரான்சிஸ்டர் மற்றும் கையடக்க
வானொலிப் பெட்டி, ஒன்றில் இரண்டாக
செயல்படும் சாதனம், ஒலிப்பதிவு/மறு
ஒலிப்பு சாதனங்கள் மற்றும் ஒலிப்
பேழைகள்

(இ) தமிழ் தினசரி நாட்காட்டி

(ஈ) தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக்
காகிதம், தட்டச்சு படிபெருக்குப் காகிதம்,
உயர் தன்மைக் காகிதம் (**Bond Paper**)

ஆகிய பொருட்களுக்கு 8 விழுக்காட்டிலிருந்து 4
விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.

4 (அ) மின்னணு அல்லாத படிபெருக்கி
இயந்திரங்கள், படிப்பெருக்கி கருவிகள்
மற்றும் படிகள் எடுக்க பயன்படுத்தப்படும்
கருவிகள் மற்றும் படிகள் எடுக்க
பயன்படுத்தப்படும் பிற கருவிகளும்,
அதற்குரிய உதிரிப் பாகங்கள் மற்றும்
மை நாடாக்கள்.

(ஆ) மின்னணு அல்லாத அட்டவணையிடும் மற்றும் கணக்கிடும் இயந்திரங்கள் ( **Non-electronic Tabulating and calculating machines)** மற்றும் அவற்றின் பாகங்கள், உதிரிகள் மற்றும் அவற்றில் பயன்படுத்தப்படும் மை நாடாக்கள்

ஆகியவற்றிற்கு 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.

(5) வணிகச் சின்னம் இடப்பட்ட உலர்ந்த ரொட்டித் துண்டு (ரஸ்க்) மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து, ரொட்டிக்கு இணையாக, 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(6) அடக்கமான பேரொளி குழல் விளக்குகள் **(Compact Fluorescent lamp)** மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(7) அனைத்து வகை மோட்டார் வாகனங்களில் பொருத்தப்படும் பல்புகள் மற்றும் ஒலிப்பான்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(8) வாழ்த்து அட்டைகள், அழைப்பிதழ்கள் போன்றவை மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.



(9) விசை உழுக்கருவிகளின் இழுவைகள், இரும்பு வகையல்லாத உலோகங்களின் கழிவுகள், முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கம்பளியால் பின்னப்பட்ட பொருள்கள் சர்பத்துகள் ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(10) உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள் மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(11) சித்த மருந்துகள் விற்பனைக்கு 17.7.1996 முதல் முன்தேதியிட்டு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சூரிய ஒளியால் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள் **(Saree falls)**, காலணிப் பட்டிகள் **(straps)**, பருத்தி நூல் கயிறு, மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், இறால் உண்ணும் உணவு, கூனி இறால் உண்ணும் உணவு, நீராவி, கரும்புச் சக்கை ஆகியவற்றிற்கு 1.4.99 முதல் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

ஆ. தொழில்துறை தொடர்பானவை

(1) கணிணிகள் மற்றும் புற உறுப்புகள் ஆகியவற்றிற்கு விற்பனைவரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. அவற்றின்மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனைவரி நீக்கப்படுகிறது.

(2) தடையில்லா மின் வழங்கும் அமைவுகளுக்கு விற்பனைவரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(3) தங்கம், வெள்ளிக் கட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. இவற்றின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனைவரி நீக்கப்படுகிறது.

(4) பழுதடைந்த அல்லது தேய்ந்த நகைகளுக்கு விதிக்கப்படும் கொள்முதல் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(5) இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்ட அமைப்புகள் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்கும் தங்கத்திற்கு முழு விற்பனை வரி விலக்கும் அவ்வாறு விற்கப்பட்ட தங்கத்திற்கு,



தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு பிரிவு 7-Aயின் கீழ் விதிக்கப்படும் கொள்முதல் வரியிலிருந்து விலக்கும் அளிக்கப்படுகிறது.

(6) வைரம், மரகதம், மாணிக்கம், இயற்கை அல்லது செயற்கை முத்துக்கள், வைடூரியம், நீலக்கல், சிவந்த ரத்தினம், பவளம், புஷ்பராகம் போன்ற விலை மதிப்புள்ள கற்களுக்கு விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(7) ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் போன்றவற்றிற்கு (**REP Licences, etc.**) விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(8) காஸ் (**Gauze**) பாண்டேஜ் துணிகளுக்கான (**bandage**) வரி விலக்கு வரம்பு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்படுகிறது.

(9) தற்போது குடிமுறைப் பொறியியல் வேலைகளுக்கு (**Civil Engineering Works**) இணக்க (**compound**) முறையில் வரி செலுத்தும் விருப்பத் தேர்வு ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டது போல் மற்ற வேலை ஒப்பந்தங்களுக்கும் இணக்க வரிமுறை அனுமதிக்கப்பட்டு, வரி வீதம் மொத்த விற்பனையளவில் 4 விழுக்காடு

என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

இ. வணிக சமுதாயம் தொடர்பானவை

(1) செயற்கை இழை நூலுக்கும், செயற்கை இழைகளுக்கும் (**Man made fibre and yarn**) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டங்களின் கீழ் 26.3.99 வரை 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக அளிக்கப்பட்ட வரித் தறைப்பு அதே நிபந்தனைக்குட்பட்டு காலவரையின்றி நீட்டிக்கப்படுகின்றது.

(2) உணவு மற்றும் குளிர்பானங்கள் மற்றும் நகை வியாபாரிகளுக்கு தற்பொழுதுள்ள இணக்க வரி விதிப்பு முறை, விருப்புரிமையாக ஆக்கப்படுகிறது. இவ்விணக்க வரி விதிப்பு முறையில் வரி செலுத்த விருப்பமில்லாத வணிகர்கள்,

(i) ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 25 இலட்சத்திற்குமேல் உள்ள உணவு மற்றும் குளிர்பான வணிகர்களைப் பொறுத்தமட்டில், 2 விழுக்காடு வீதம் வரியை வசூலித்து அரசுக்குச் செலுத்த வேண்டும்.



(ii) ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 3 இலட்சத்திற்கு மேல் உள்ள நகை வணிகர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் நகைகள்மீது 4 விழுக்காடு வீதம் வரியை வசூலித்து அரசுக்குச் செலுத்த வேண்டும்.

(3) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் பிரிவு 3(4)-ன் கீழ் விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை வழங்க வேண்டிய படிவம் XVII, ஆண்டுக்கு ஒருமுறை வழங்கினால் போதுமானது.

(4) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்படாத பொருட்கள் இதுவரை பகுதி D-வரிசை எண்.67ன்படி 11 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வந்தது. இனிமேல், அப்பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு இணையான பொருட்கள் இடம் பெற்றுள்ள பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, பின்வரும் பொருட்கள் முதலாம் அட்டவணையில் அதற்குரிய பகுதிகளில் சேர்க்கப்பட்டு அதற்கு இணையான பொருட்களுக்கான வரிவிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

(அ) பகுதி -A 2 விழுக்காடு

வணிகச் சின்னம் இல்லாத சுண்ட வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத் தக்காளி வத்தல், போன்ற <u>வணிகச் சின்னமின்றி</u> விற்பனை செய்யப்படும் அனைத்து வத்தல்கள்.

(ஆ) பகுதி - B 4 விழுக்காடு

(1) கழிசலான (**condemned**) கோணிப் பைகள்

(2) அந்துருண்டைகள் (**Napthalene Balls**)

(3)(அ) முடி மற்றும் உடலைச் சுத்தப்படுத்தும் பொடிகளான - சிகைக்காய், பூந்திக் கொட்டை, இலுப்பைப் புண்ணாக்கு, பூலான் கிழங்கு, உசிலை இலைகள், கஸ்தூரி மஞ்சள் மற்றும் அவற்றுடன் சேர்க்கப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிப் பொருட்கள் ஆகியவற்றுக்கு.

(ஆ) முதலாம் அட்டவணை **'E'** பகுதியில் பிரிவு 22ல் சொல்லப்பட்டுள்ள இனங்களல்லாத தேய்த்துக் கழுவி சுத்தமாக்கும் பொடிகள்

(4) சணல் முறுக்கு நூல், சணல் மேசை விரிப்புகள், சணல் கதவடி விரிப்புகள், சணல் கைவினைப் பொருட்கள் மற்றும் சணல் சுவர் அலங்காரப் பொருட்கள்

(5) அனைத்து வகை கொசுவலைகள்

(6) ஓட்ஸ்



(7) அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத காகித உறைகள்

(8) செம்மண் மற்றும் சிவப்பு சரளைக் கற்கள்

(9) (i) உடற் கட்டமைப்புக்கான சாதனங்கள் உள்ளடக்கிய உடற் பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்

(ii) குழந்தைகளுக்கான விளையாட்டுத் திடல் உபகரணங்கள்

(10) (i) நிலக்கடலைப் பருப்பு, எள், அரிசிப் பொரி, வறுத்த பயறு, பட்டாணிப் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள்

(ii) வணிகச் சின்னத்துடனோ அல்லது வணிகச் சின்னமின்றியோ விற்கப்படும் முறுக்குகள்

(iii) வணிகச் சின்னமின்றி விற்கப்படும் அனைத்து வகையான சிப்ஸ்

11. வணிகச் சின்னமுடன் விற்பனை செய்யப்படும் சுண்டவத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத் தக்காளி வத்தல், மற்றும் வணிகச் சின்னமுடன் விற்பனை செய்யப்படும் அனைத்து காய்கறி வத்தல்கள்

(இ) பகுதி - C 8 விழுக்காடு

(1) அகர் பத்திகள்

(2) இரும்பு மற்றும் எஃகினால் செய்யப்பட்ட அனைத்துவகை கம்பித் தடுப்புகள்

(3) காலி எரிவாயு சிலிண்டர்கள்

(4) சாவி சங்கிலிகள் மற்றும் சாவிப் பிடிப்பான்கள்

(5) (i) அறுவை சிகிச்சையின்போது பொருத்தப்படும் பொருட்கள், செயற்கை எலும்புகள், எலும்பு சிமெண்ட், அடிவயிற்றைத் தாங்கும் பட்டைகள், கழுத்துப் பட்டைகள், முழங்கால்மேல் பொருத்தப்படும் உறைகள்.

(ii) லேக்டோஸ் ஐ.பி/பீ.பி

(iii) வெப்ப அளவிகள் (**Thermometers**)

(6) முதலாவது அட்டவணையில் வேறெங்கும் சொல்லப்பட்ட இனங்கள் தவிர இரும்பு அல்லாத உலோகங்கள் மற்றும் அவற்றின் உலோகக் கலவைகள்

(7) காகிதக் கைக்குட்டைகள்

(8) நிழற்படத் திரட்டு வைப்பேடு (**Photo Album**) முத்திரை வில்லைகள் திரட்டு வைப்பேடு மற்றும் அவைபோன்ற திரட்டு வைப்பேடுகள் (ஆல்பம்)



(9) பாட்டில்களில், பிளாஸ்டிக் பைகளில், குவளைகளில் மற்றும் சிறிய தவலைகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் தண்ணீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் அல்லது எந்த ஒரு அடைப்பானிலும் வைத்து விற்கப்படும் தாது குடிநீர்.

(10) கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள், ஆணைப் புத்தகங்கள், ரசீது புத்தகங்கள், ஞாபகப்படுத்தும் குறிப்பேட்டுப் புத்தகங்கள், மடிப்பான்கள், கோப்பு உறைகள் மற்றும் காகிதம் அல்லது காகித அட்டையினால் செய்யப்பட்ட புத்தக உறைகள்.

(11) வணிகச் சின்னமின்றி விற்பனை செய்யப்படும் ஐஸ்கிரீம்கள்.

(ஈ) பகுதி - D 11 விழுக்காடு

(1) (i) வணிகச் சின்னமிட்டு பதப்படுத்தி அடைக்கப்பட்ட சுத்தமான இறைச்சி, ஆகாரத்திற்கான கோழி, மீன், கடல் உணவு மற்றும் முட்டைகள்

(ii) வணிகச் சின்னமுடைய மற்றும் அடைக்கப்பட்ட சுத்தமான காய்கறிகள் மற்றும் பழங்கள்.

(2) (i) முதலாம் அட்டவணையில் வேறு எந்தவொரு இடத்திலும் சொல்லப்படாத உலர்ந்த பழங்கள் மற்றும் கொட்டைகள் மற்றும் மேல் ஓடு நீக்கப்பட்ட பாதாம் கொட்டை, பிஸ்தா, உலர்ந்த திராட்சைகள், அத்திப்பழங்கள், அப்ரிகாட், வால்நட் ஆகியன

(ii) உலராத பேரிச்சம்பழம்.

(உ) பகுதி - E 16 விழுக்காடு

(1) வணிகச் சின்னத்துடன் விற்பனை செய்யப்படும் உருளைக்கிழங்கு சிப்ஸ் போன்ற அனைத்து சிப்ஸ் வகைகள்.

(2) பழைய மற்றும் உபயோகித்த கண்ணாடி பாட்டில்கள் மீது கடைசி கொள்முதல் வரி.

(3) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மித அடர்த்தி நார்ப் பலகைகள் (**Medium density fibre boards**) மற்றும் ஒருங்கடுக்கான மெல்லிய மேல் பூச்சுடைய மித அடர்த்தி கொண்ட பிளாஸ்டிக் நார்ப் பலகைகள்



(4) நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மித அடர்த்தி நார்ப் பலகைகள் (**MDF Boards**) மற்றும் ஒருங்கடுக்கான மெல்லிய மேல்பூச்சுடைய மித அடர்த்தி கொண்ட பிளாஸ்டிக் நார்ப் பலகைகள் மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**இவ்வரிவிதிப்பு மாற்றங்களால் வரி வருவாயில் ஏற்படும் விளைவுகளை ஓர் ஆண்டுக்குப் பின் பரிசீலித்து எதிர்பார்த்த கூடுதல் வரி வருவாய் கிடைக்கவில்லை என்றால், இவற்றில் தக்க மாற்றம் செய்ய நேரிடும்.**

(5). வணிகராகப் பதிவு செய்ய மொத்த விற்பனைத் தொகை சென்ற நிதிநிலை அறிக்கையில் ரூ.75,000லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டது. வரிவிதிப்பிலிருந்து விலக்குக்கான வரம்பையும் வணிகராகப் பதிவு செய்வதற்கான வரம்பையும் ஒரே சீராக ஆக்க முடிவெடுத்து, பதிவு செய்ய மொத்த விற்பனைக்கான வரம்பினை ரூ.3,00,000 ஆக உயர்த்தப்படுகிறது. இந்த மாற்றத்தால் 20,000த்திற்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் பயனடைவார்கள்.

6. சமாதான் திட்டம்

வணிகவரி நிலுவைகளை முனைப்புடன் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் ரூ.43 கோடியாக இருந்த வணிகவரி நிலுவை வசூல், 1998-99ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்கள் வரை ரூ.130 கோடியாக உயர்ந்துள்ளது. வரி நிலுவைகளைக் குறைக்க சட்ட மாற்றங்கள் செய்வது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. வணிகவரி பற்றிய மேல்முறையீடுகள் பல்வேறு மேல்முறையீட்டு நிலைகளில் பல்லாண்டுகளாகத் தேங்கிக் கிடப்பதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் கோடிக்கணக்கில் நிலுவையில் உள்ளது. இந்தத் தொகையில் கணிசமான பகுதியை விரைவில் வசூலித்திட, மத்திய அரசு செயல்படுத்திய "சமாதான்" திட்டம் போன்ற ஒன்றை நமது மாநிலத்தில் செயல்படுத்துவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

7. புதிய வருவாய்க்குரிய திட்டங்கள்

1999-2000ம் ஆண்டில் புதிய மற்றும் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.



(1) தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு விதிக்கப்படும் விற்பனைவரி 1 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

(2) பான்மசாலா மீதான வரி 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

(3) சிகரெட் பிடிப்பதனால் விளையும் கேட்டினை பெருமளவு குறைப்பதற்காக பீடி நீங்கலாக சிகரெட் போன்ற ஆடம்பர புகையிலைப் பொருட்களுக்கு அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல் 5 விழுக்காடு ஆடம்பர வரி விதிக்கப்படும்.

8. மதிப்புக் கூட்டு வரி

மதிப்புக் கூட்டு வரி **(Value Added Tax)** விதிப்பைப் பொறுத்தவரை வணிகர்களின் கோரிக்கையை ஆழ்ந்து ஆய்வு செய்த பின்னர் இம்முறை பற்றியும் இதன் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் பற்றியும் வணிகர்களுக்கு விளக்கவும், இதனைச் செயல்படுத்தும் முறை பற்றி வணிகவரித் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டு, இவ்வரிவிதிப்பு முறையைச் செயல் படுத்துவதை 31.3.1999 வரை நிறுத்தி வைக்கப்-

பட்டது. சென்னையிலும், மதுரையிலும் வணிகவரித்துறை அலுவலர்கள் மற்றும் வணிகச் சங்கப் பிரதிநிதிகளுக்கு புது தில்லியிலிருக்கும் தேசிய பொது நிதி மற்றும் கொள்கை பயிற்சி நிலையத்திலுள்ள (NIPFP) வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இவ்வரிவிதிப்பு நடைமுறையை செம்மைப்படுத்த இன்னும் கால அவகாசம் தேவைப்படுமெனக் கருதப்படுவதால், இவ்வரிவிதிப்பு முறையை செயல்படுத்தும் திட்டத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு, அதாவது 31.3.2000 வரை நிறுத்தி வைக்க அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## 9. வணிகவரித்துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்

வணிகவரித்துறை, (1) வரிவிதிப்புப் பிரிவு (2) தணிக்கைப் பிரிவு (3) செயலாக்கப் பிரிவு (4) மேல்முறையீட்டுப் பிரிவு என நான்கு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகிறது.

வணிகவரி துணை ஆணையர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களின் மூலமும் வணிகவரி கோட்டங்களுக்கு தாமே நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொள்வதன் மூலமும் வரி



விதிப்புப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவின் செயல்முறைகளை வணிகவரி சிறப்பு ஆணையர் கண்காணித்து ஆய்வு செய்கிறார். தணிக்கைப் பிரிவைப் பொறுத்தவரை, துறை தணிக்கை அலுவலர்களின் தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக்காயரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக் களையும் பணிகளைக் கண்காணிக்க வணிகவரி ஆணையரின் கீழ் ஓர் இணை ஆணையர் உள்ளார்.

### மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

இம்மாநிலத்தில் விற்பனைவரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு அது மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல் முறையீட்டு துணை ஆணையர்கள் ஆகியோரின் தீர்ப்புகளின் மீது எழும் மேல்முறையீடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்குகிறது. விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் பின்வரும் இடங்களில் செயல்படுகின்றன:-

(1) சென்னை (முதன்மை ஆயம்)

(2) சென்னை (கூடுதல் ஆயம்)

(3) கோயம்புத்தூர் (கூடுதல் ஆயம்)

(4) மதுரை (கூடுதல் ஆயம்)

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, தீர்ப்பாயத் தலைவராக உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார். துறை உறுப்பினர்களாக முதன்மை ஆயத்தில் இணை ஆணையர்களும் கூடுதல் ஆயங்களில் துணை ஆணையர்களும் உள்ளனர்.

### 10. தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்

தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம், இதுவரை, தலைவர், துணைத் தலைவர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஆக மூன்று பேர்களுடன் இயங்கி வந்தது. மாவட்ட நீதிபதி ஒருவர் நீதித்துறை உறுப்பினராக 1.12.98 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இத்தீர்ப்பாயம் முழுமையான உறுப்பினர்களுடன் இயங்கி வருகிறது.

### 11. வணிகவரித்துறையில் தகவல் தொழில் நுட்பம்

வணிகவரித்துறையில் அனைத்து நிலைகளிலும் கணிப்பொறிமயமாக்குதல் வேண்டும் எனும் நோக்கத்தோடும், வெளிப்படையான



நிருவாகத்தை இத்துறையில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் பெருமளவில் ஒருங்கிணைந்த கணிப்பொறி மயமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு அதில் முதற் கட்டமாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களிலுள்ள 140 வரிவிதிப்பு வட்டங்கள், 18 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 9 எல்லையோர சோதனைச் சாவடிகள், தலைமைச் செயலகத்திலுள்ள அரசுச் செயலர் அலுவலகம், வணிகவரித்துறை ஆணையர் அலுவலகம் மற்றும் சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள கணிப்பொறி மையம் ஆகியவை ரூ.3.57 கோடி செலவில் முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தகவலியல் மைய பொது தகவல் முறையக வலைதளத்தில் **(GISTNIC WEB SITE)** வணிகவரித்துறை தொடர்பான பொது விவரங்கள், பதிவு செய்வதற்கான வழிமுறைகள், வரி செலுத்தும் முறை மற்றும் தற்பொழுது நடைமுறையிலுள்ள பொருட்களுக்கான வரிவீதங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் அறிந்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் மென்பொருள் குழு, கேட்பு வசூல் நிலுவை தொடர்பான ஒரு மென்பொருள் தொகுப்பை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

12. வருவாய் வசூல் நிலை

1998-99ஆம் நிதியாண்டில் தொழில் பின்னடைவு மற்றும் பொதுவான பொருளாதாரத் தேக்க நிலை போன்ற எதிர்மறைப் போக்குகள் இருந்தன. அத்தகு பொருளாதார மந்தநிலை இருந்த போதிலும் இத்துறையின் அயராத உழைப்பால் சுமார் ரூ.6583.00 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

இத்துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின் கீழ், கடந்த சில ஆண்டுகளில் வசூல் செய்யப்பட்ட வருவாய் நிலை பின்வருமாறு:-

வணிகவரித்துறையின் வருவாயும் செலவும்

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) | செலவு (ரூபாய் கோடியில்) | வருவாயில் செலவின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1994-95 | 4164.84 | 45.64 | 1.10 |
| 1995-96 | 5023.37 | 52.52 | 1.05 |
| 1996-97 | 5751.19 | 59.93 | 1.04 |
| 1997-98 | 6062.68 | 70.24 | 1.15 |
| 1998-99 | 6583.00* | 57.65 (டிசம்பர் 98 வரை) | 0.88 |

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை



(2) 1994-95 முதல் 1998-99 வரை வசூல் செய்யப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு-

(அ) தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம்,1959

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 3,452.92 |
| 1995-96 | 4,118.57 |
| 1996-97 | 4,717.19 |
| 1997-98 | 4,963.06 |
| 1998-99 | 5,455.46 (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை) |

(ஆ) மத்திய விற்பனைவரிச் சட்டம்,1956

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 477.19 |
| 1995-96 | 590.63 |
| 1996-97 | 672.06 |
| 1997-98 | 706.82 |
| 1998-99 | 779.31 (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை) |

(இ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம்,1939 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம், 1961

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 87.89 |
| 1995-96 | 98.96 |
| 1996-97 | 107.82 |
| 1997-98 | 108.55 |
| 1998-99 | 90.95 (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை) |

(ஈ) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம்,1935

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 5.70 |
| 1995-96 | 6.67 |
| 1996-97 | 6.42 |
| 1997-98 | 6.52 |
| 1998-99 | 5.40 (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை) |



(உ) தமிழ்நாடு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்,1981

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 35.86 |
| 1995-96 | 50.77 |
| 1996-97 | 60.69 |
| 1997-98 | 64.71 |
| 1998-99 | 68.85 (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை) |

(ஊ) தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம்,1983

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1994-95 | 1.00 |
| 1995-96 | இல்லை |
| 1996-97 | 0.05 |
| 1997-98 | இல்லை |
| 1998-99 | இல்லை |

(ஏ) தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்,1990

| ஆண்டு | மொத்த வரவு(ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 105.27 |
| 1995-96 | 157.77 |
| 1996-97 | 185.96 |
| 1997-98 | 213.02 |
| 1998-99 | 182.63 (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காத தொகை) |

13. ஏனைய சிறப்பு அம்சங்கள்

(1) மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்களின் பணி ஆய்வு

மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் ஆகியோரின் பணி குறித்த ஆய்வுக் கூட்டம் 17.7.98 அன்று வணிகவரித் துறையின்



அரசுச் செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பழைய வழக்குகளை குறிப்பிட்ட கால வரையறைக்குள் முடிக்கவும், அனைத்து வழக்குகளையும் விரைவாக முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கவும், உரிய அறிவுரைகள் இக்கூட்டத்தில் வழங்கப்பட்டன.

(2) விற்பனைவரி ஆலோசனைக் குழு

வணிகர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று கருத்துப் பரிமாற்றம் செய்து விற்பனைவரி நிருவாகத்தை சீர்மைப்படுத்தும் பொருட்டு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விற்பனைவரி ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

(i) மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு

என்னுடைய தலைமையில் மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு செயல்படுகிறது. மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழுக் கூட்டம், என்னுடைய தலைமையில் கடந்த 20.11.98ம் நாளன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் உறுப்பினர்கள் பல்வேறு பரிந்துரைகளையும்,

ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அவைகள் பரிசீலனையில் உள்ளன.

### (ii) மாவட்ட அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு

மாவட்டங்களிலுள்ள விற்பனைவரி ஆலோசனைக் குழுவிற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சியர்கள் வணிகர் கழகங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களை அவ்வப்போது கூட்டி மாவட்ட அளவிலான பிரச்சினைகளைக் கேட்டறிகிறார்கள்.

### (3) காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை மற்றும் தள்ளுபடி போன்ற தொழிலகங்களுக்கான சலுகைகள்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து தொழிற் பெருக்கத்திற்கு வித்திடும் வகையில் மிக பின்தங்கிய வருவாய் வட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு, வரித் தொகையைக் கைவிட அனுமதித்தும், புதிய தொழிலகங்கள், தொழில் விரிவாக்கங்கள், நலிந்து போன



தொழிலகங்கள் போன்றவற்றிற்கு அவை செலுத்த வேண்டிய வரிகளை காலம் தள்ளி வட்டியின்றிச் செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கி வருகிறது.

இவ்வகையில் தொழிலகங்களுக்கு 1998-ம் ஆண்டில் 31.8.98 வரை ரூ.372.37 கோடி வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகையாக **(Deferral)** வழங்கப்பட்டுள்ளது.

### (4) உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்தத் தொகையில் 30 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கொப்ப, மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு 31.3.1997 வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகத்தை மேம்படுத்த அவற்றின் வருவாய் ஆதாரங்களை அதிகரிக்கும் பொருட்டு 1.4.97 முதல் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் நிதி மானியம் ஒரே சீராக 90 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

### (5) தமிழ்நாடு விற்பனைவரித் துறை நிருவாக சீர்திருத்தக் குழு

வணிகவரித்துறை அலுவலர்களின் பணிப் பளு, பணி நடைமுறைகள், பயிற்சிகள்,

கணினிமயமாக்கல்,பணிச் சூழல், அலுவலர்களுக்குத் தேவையான வசதிகள் ஆகியன குறித்து ஆய்வு செய்ய வணிகவரித் துறையின் அரசுச் செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. 3.4.98 மற்றும் 25.6.98 ஆகிய நாட்களில் நடந்த இக்குழுவின் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(6) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்

ரூபாய் பத்து இலட்சத்திற்கு அதிகமாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் கூடுதல் வரி செலுத்தும் வகையில் இருந்த சட்டத்தை, 1.8.96 முதல் ரூ.100 கோடி விற்பனைத் தொகையுள்ள வணிகர்கள் மட்டுமே கூடுதல் வரி செலுத்தும் வகையில் திருத்தப்பட்டது. அரசின் நிதி நிலையை கருத்திற் கொண்டு 1.4.98 முதல் அத்தொகை ரூ.25 கோடி விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் கூடுதல் விற்பனை வரி செலுத்தும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டது.



(7) நிதிநிலை அறிக்கைக்கு முன் தொழில் மற்றும் வணிகக் கழகங்களின் சார்பாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம்

தமிழக நிதிநிலை அறிக்கை வரலாற்றில் முதல் முறையாக 26.2.1999-ம் நாளன்று என்னுடைய தலைமையில் தொழில் மற்றும் வணிகக் கழகங்களின் சார்பாளர்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் சார்பாளர்கள் பங்கு கொள்ளும் வகையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பயனுள்ள ஆலோசனைகளை குறிப்பாக வரிவிலக்கு மற்றும் வரிக்குறைப்பு போன்ற ஆலோசனைகள் மட்டுமல்லாது அரசின் வருவாயைப் பெருக்குவதற்குரிய வழிவகைகளையும் கூறுமாறு கேட்டுக் கொண்டேன். 36 தொழில் மற்றும் வணிகக் கழகங்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் சார்பாக கலந்து கொண்ட சார்பாளர்கள் பலர் பயனுள்ள பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

14. வணிகர் நல வாரியம்

வணிகர்களுக்கு உதவும் நோக்கத்துடன் 1989-ல் வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. பின்னர் இவ்வணிகர்நல வாரியம் 1997-ல் திருத்தி

அமைக்கப்பட்டது. அரசு அலுவலர்களும், வணிகச் சங்க பிரதிநிதிகளும் வாரிய நிருவாகக் குழு உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை 34 வணிகர் குடும்பங்களுக்கு ரூ.10,25,000/- குடும்ப நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 5 வணிகர்களுக்கு சிறுநீரக அறுவைச் சிகிச்சை மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டமைக்காக ரூ.83,000 நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. 21 வணிகர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு கல்வி நிதி உதவியாக ரூ.42,000/- வழங்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் 7-வது கூட்டம் கடந்த 21.12.98-ம் நாளன்று தலைமைச் செயலகத்தில், இவ்வாரியத்தின் துணைத் தலைவராக உள்ள வணிகவரித் துறை செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வாரியத்தில் 31.12.98 வரை 26,650 ஆயுட்கால உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுட்கால உறுப்பினர் கட்டணமாக 31.12.98 வரை ரூ. 41,61,325 வசூலிக்கப்பட்டுள்ளது.



இணை மானியமாக அரசால் இவ்வாரியத்திற்கு ரூ.35,48,575/- அரசு ஆணை எண்.99, வணிகவரி மற்றும் அறநிலையம், நாள் 24.3.97ல் வழங்கப்பட்டுள்ளது.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" -குறள்.

மு.கருணாநிதி
முதலமைச்சர்.